பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 11 2025 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உயர்கல்வியில் இந்திய கல்வி நிறுவனங்கள் உலகத் தரத்துடன் முன்னேறி வருவதற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.
- சட்ட உதவி வழங்கும் வழிமுறைகளை வலுப்படுத்துவது குறித்த தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.
- தமிழகத்தில் அனைத்து விளையாட்டுகளுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- மினி ஜவுளிப் பூங்கா மூலம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.
- இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று பிரிஸ்பேனில் நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உயர்கல்வியில் இந்திய கல்வி நிறுவனங்கள் உலகத் தரத்துடன் முன்னேறி வருவதற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தில்லி அருகே உள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச தரப்பட்டியலில் 54 பல்கலைக்கழகங்களுடன் இந்தியா 4வது இடத்தில் உள்ளது என்று கூறினார்.

தொழில்நுட்ப நிபுணத்துடன் சிறந்த கல்வியும் அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், மாணவர்கள் ஒழுக்கம் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்களை இளம் பருத்திலேயே வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருப்பதற்கு பாராட்டு தெரிவித்த குடியரசு துணைத்தலைவர், தற்போது மாணவர்கள் படைத்து வரும் சாதனைகளில் ஆசிரியர்களின் அயராத உழைப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரதிபலிக்கிறது என்று கூறினார்.

<<<<>>>>

சட்ட உதவி வழங்கும் வழிமுறைகளை வலுப்படுத்துவது குறித்த தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

தேசிய சட்ட சேவைகள் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் மாநாட்டில் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள், சட்ட உதவி ஆணையத்தின் நிர்வாகிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

இதில் தேசிய சட்ட உதவி ஆணையத்தின் சமூக, சமரச பயிற்சி திட்டத்தை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் சட்ட சேவை நிறுவனங்களின் நிதி மேலாண்மை உள்ளிட்ட சட்ட சேவை கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அனைத்து விளையாட்டுகளுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டிகள் தமிழகத்தில் நடைபெற உள்ளது என்று கூறினார்.

இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்கு மாநில அரசு 70 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் முதல் முறையாக அனைத்து கண்டங்களில் இருந்தும் மொத்தம் 24 நாடுகளின் அணிகள் பங்கேற்க உள்ளதாகவும், சென்னை மற்றும் மதுரையில் 72 போட்டிகள் நடைபெற உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஹாக்கி இந்தியா நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக ஹாக்கி விளையாட்டை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்ல உள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான பயிற்சி மாவட்டம்தோறும் இணைய வழியில் வழங்கப்பட உள்ளது.

இதற்காக ஒன்று முதல் 10ஆம் வகுப்பு வரையிலான அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்சிக்கான வழிமுறைகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சிக்கான பாடங்களை இம்மாதம் 17ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்று மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் மாவட்ட பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பணியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் TET தேர்ச்சி பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கடந்த செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி உத்தரவிட்டது.

இந்த அறிவிப்பால் தமிழகத்தில் சுமார் ஒரு லட்சத்து 76 ஆயிரம் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பாதிக்கப்படும் நிலை உருவானதால் அவர்களுக்கு அடுத்த ஆண்டு 3 சிறப்பு TET தேர்வுகள் நடத்தப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளதால் இந்தப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

<<<<>>>>

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ள மினி ஜவுளிப் பூங்கா மூலம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் சிறிய ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான பணிகளை நேற்று தொடங்கி வைத்து 86 கைத்தறி நெசவாளர்களுக்கு 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

கைத்தறித் துறையில் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை பிற மாநிலங்களும் பின்பற்ற தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன், கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்து ஜவுளிப் பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக கூறினார்.

கைத்தறி நெசவாளர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதிலும், அவர்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதிலும் மாநில அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு இயக்கப்படும் ஆம்னி பேருந்து சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகள் மீது கேரள போக்குவரத்துத் துறையினர் அபராதம் விதித்துள்ளதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பேருந்து சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தனியார் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நேற்றிரவு முதல் கேரளா செல்லும் ஆம்னி பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அந்தப் பேருந்துகளை நம்பியிருந்த பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

சென்னைப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் படித்த மாணவர்கள் தங்களது பழைய அரியர் பாடங்களை எழுத மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை இளங்கலை, முதுகலை, டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளில் சேர்ந்து அரியர் வைத்துள்ள மாணவர்கள் மீண்டும் தேர்வெழுதி தேர்ச்சி பெற கடைசியாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தேர்வு அடுத்த மாதம் நடைபெறும் என்றும், இதற்கான விண்ணப்பம் வரும் 10ஆம் தேதி தொலைதூர கல்வி நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றும் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை வேளச்சேரி - பரங்கிமலை ரயில் நிலையங்களுக்கு இடையே துரித ரயில்போக்குவரத்து விரைவில் தொடங்கப்பட உள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் காரணமாக பல ஆண்டுகளாக இத்திட்டம் நிறைவுபெறாமல் தாமதமாகி வந்தது.

நிலம் கையகப்படுத்தும் பிரச்சினைக்கு நீதிமன்ற உத்தரவு மூலம் தீர்வு காணப்பட்டதால் பரங்கிமலை ரயில் நிலையம் அருகே முடிக்கப்படாமல் இருந்த ரயில் பாதைப் பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து நேற்று தெற்கு ரயில்வேயின் கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் சரக்கு ரயில் இயக்கப்பட்டு பாதை மற்றும் பாலத்தின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டது.

<<<<>>>>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய 4 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ரஷ்ய எண்ணெய் மீதான தடைகளில் இருந்து ஹங்கேரிக்கு விலக்கு அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோன்ல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

ரஷ்ய ராணுவத்தில் பணிபுரியும் 44 இந்தியர்களை உடனடியாக விடுவிக்குமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது.

**<<<<>>>>**

தில்லி Rithala மெட்ரோ ரயில் நிலையத்தின் அருகே குடிசைப் பகுதியில் இன்று காலை நிகழ்ந்த தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

**<<<<>>>>**

அசாம் மாநிலம் திப்ருகரில் இருந்து கன்னியாகுமரி வந்த விரைவு ரயிலில் கடத்தி வரப்பட்ட 2 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 6 ஏக்கர் பரப்பளவில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று தமிழக ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் இயக்குநர் திருமதி முத்துமீனாள் தெரிவித்துள்ளார்.

-லட்சுமணன்

நாமக்கல் மாவட்டத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திருமதி ஆசியா மரியம் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னையில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் 14வது பட்டமளிப்பு விழாவில் 284 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் மணி 1.45க்கு தொடங்க உள்ளது.

<<<<>>>>